# ‘திராவிடம்’ என்ற சொல்லைக் கேட்டாலே சிலருக்கு அச்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

வெளியிட, மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இன்றைக்கு அதன் தமிழாக்கத்தை, கலைஞர் அரங்கில் நான் வெளியிடும் பெருமை கிடைத்திருக்கிறது! இதைவிட எனக்கு என்ன பாக்கியம் கிடைக்கப்போகிறது. 27 ஆண்டுகள் தாமதமாக, தமிழாக்கம் வருகிறதே என்று கவலை இருந்தாலும்; நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், இந்த நூலை வெளியிட வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறதே என்று நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

திராவிட இயக்கம் என்பது, Socio-Political Movement-என்று இந்த நூலில் முனைவர் பொன்முடி நிறுவுகிறார். திராவிட இயக்கத்தின் வழித்தோன்றலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியும், Socio-Political Government என்று சொல்லும் காலகட்டத்தில் இந்த நூல் வெளியாகிறது. பொன்முடி அவர்கள், இந்த நூலில், அன்னைத் தமிழ்நாட்டையும் - அமெரிக்கப் பெருநாட்டையும் ஒப்பிட்டிருக்கிறார். அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ்ப் பெருங்குடி மக்களின் விடியலுக்கும் - விடுதலைக்கும் - மேன்மைக்கும் தோன்றியதுதான் திராவிடர் இயக்கம்!

**அமைதிவழி புரட்சியால் பகுத்தறிவு கருத்துகளை பரப்பிய அறிவியக்கம்!**

டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர் ஆகியோர் இணைந்து, 1916-ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்கினார்கள். ‘திராவிட மணி’ இரட்டைமலை சீனிவாசனார், பெருந்தலைவர் எம்.சி.ராஜா உள்ளிட்ட 19 தலைவர்களால் உருவாக்கப்பட்ட மாபெரும் அமைப்பு இது. தொடக்கூடாது - கண்ணில் படக்கூடாது - படிக்கக் கூடாது - முழுமையான உடை உடுத்தக் கூடாது - வீடு கட்டக் கூடாது என்று அடிமைகளை விடக் கேவலமாக நம் மக்கள் நடத்தப்பட்டார்கள். கேட்டால், இதுதான் மனுநீதி என்று சொன்னார்கள். இந்த அநீதிக்கு எதிராக போர்க்குரல் எழுப்பி - போராட்டக் களங்கள் கண்டு - வெற்றியும் பெற்ற இயக்கம் தான், நம்முடைய திராவிட இயக்கம்! பழமைவாத கருத்துகளுக்கு எதிராக, முற்போக்குக் கருத்துகளை முன்வைத்தோம். பேச மட்டுமல்ல, பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சென்று அமைதி வழியில் ஒரு புரட்சியே நடத்தினோம்! அதனால்தான் இது, அறிவியக்கம்!

இந்தியத் துணைக் கண்டத்தில் நம் மக்கள் எப்படி, பிறப்பின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டார்களோ, அதே போன்று அமெரிக்க மண்ணில், கருப்பின மக்கள் நிறத்தால் ஒடுக்கப்பட்டார்கள்! ஒடுக்கப்பட்டவர்கள் என்று சொல்வதைவிட ‘ஒதுக்கப்பட்டவர்கள்’ என்று மிகச்சரியாக நம்முடைய பொன்முடி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். திராவிட இயக்க வரலாற்றை 1916 முதல் 1949 வரையிலும், கருப்பர் இயக்க வரலாற்றை 1909 முதல் 1941 வரையிலும் எடுத்துக்கொண்டு, இந்த ஆய்வு நூலை எழுதி இருக்கிறார்.

**அடிமைத்தனத்தை உடைக்க இங்கு உருவான திராவிடர் இயக்குமும் அங்கு உருவான கருப்பர் இயக்கமும்!**

இங்கு ஆதிக்கம் செலுத்தியவர்கள் என்ன சொன்னார்கள்? ”சூத்திரனுக்கு வேலை என்பது, மற்ற மூன்று வகுப்பினருக்கு அடிமை வேலை பார்ப்பது” அங்கு அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் என்ன சொன்னார்கள்? ‘அடிமைகளே நீங்கள் கடவுளுக்கு கீழ்படிவது போன்று, உங்களுக்கு மேலானவர்களுக்கு கீழ்படியுங்கள்’-என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட அடிமைத்தனத்தை உடைக்கத்தான், இங்கு திராவிட இயக்கமும் - அங்கு கருப்பர் இயக்கமும் உருவானது! அமெரிக்க வரலாற்றிலேயே, 2009-ஆம் ஆண்டுதான் கருப்பர் இனத்தைச் சேர்ந்த ஒபாமா அவர்கள், முதன்முதலாக அதிபரானார். ஆனால், 1966-லேயே நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், கருப்பர் இனத்தைச் சேர்ந்த ஒருவர், அதிபராக - வெள்ளை மாளிகையில் குடியேறுவது போன்ற, ஒரு புதினத்தை ‘வெள்ளை மாளிகையில்’ என்ற பெயரில் எழுதினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய “The Dravidian Movement and the Black Movement” நூலின் தமிழாக்கமான “திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்” நூல் வெளியீட்டு விழாவில், நூலினை வெளியிட, அந்நூலின் முதல் பிரதியை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நூலாசிரியர் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், நூல் மொழிபெயர்ப்பாளர் அசதா, பதிப்பாளர் சுபகுணராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஒருவர் இருக்கிறார், யார் என்று உங்களுக்கே தெரியும்! சட்டமன்றத்தில் திராவிட மாடல்– என்று எழுதி கொடுத்தால் பேச மாட்டார்! இந்தி மாத விழா நடத்த கூடாது– என்று சொன்னால், அந்த விழாவில் திராவிடத்தை விட்டு விட்டு தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவாங்க! ஏன், “திராவிட நல் திருநாடு”– என்று சொன்னால் உங்கள் நாக்கு தீட்டாகிவிடுமா? இப்படி பாடினால் சிலருக்கு, வாயும் வயிறும் மூளையும் – நெஞ்சும் எரியும் என்றால் திரும்பத் திரும்ப பாடுவோம்! ‘திராவிடம்’ என்பது ஒருகாலத்தில் இடப்பெயராக – இனப்பெயராக – மொழிப் பெயராக இருந்தது. ஆனால், இன்றைக்கு, அது, அரசியல் பெயராக – ஆரிய ஆதிக்கத்திற்கு எதிரான புரட்சிப் பெயராக உருவெடுத்திருக்கிறது! ’திராவிடம்’ என்பது ஆரியத்திற்கு ‘எதிர்ப்பதம்’ மட்டுமல்ல; ஆரியத்தை பதம் பார்க்கும் சொல்! அவர்களுக்கு தலைவர் கலைஞரின் முழக்கத்தை நான் நினைவுபடுத்துகிறேன், “கட்டை விரலோ, தலையோ காணிக்கையாக – இந்நாளில் எவனும் கேட்டால் பட்டை உரியும் – சுடுகாட்டில் அவன் கட்டை வேகும்!” இந்த முழக்கத்தை நிலை நாட்ட தான், திராவிட மாடல் இருக்கிறது!**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொருத்தவரை, சாதியின் பேரால் - சாத்திர சம்பிரதாயங்களின் பேரால் - காலம் காலமாக உருவாக்கி வைத்திருந்த அத்தனை தடைகளையும் உடைக்கும் சட்டங்களை ஆட்சி அதிகாரத்தின் மூலமாக நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். தடை என்றால், அதை உடை! - அதுதான் நம்முடைய Style! அதனால்தான் நம்மை ஆதிக்க சக்திகளுக்கு பிடிக்கவில்லை! அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டார்களே என்ற ஆத்திரத்தை, ஆரிய ஆதிக்கவாதிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை! அதை இன்னும் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்! அவர்களுக்கு ‘திராவிடம்’ என்ற சொல்லைக் கேட்டாலே அலர்ஜியாக இருக்கிறது! இதை தெரிந்து தான், தந்தை பெரியார் சொல்லி கொடுத்தார். ‘திராவிடம்’ என்ற சொல்லுக்கு பயப்படுவது போன்று, ஆரியம் வேறு எந்தச் சொல்லுக்கும் அஞ்சி நடுங்கியதில்லை”-என்று பேசினார். அதை நாங்கள் இன்றைக்கு வரை, கண்கூடாக பார்க்கின்றோமே!

**திராவிட நல் திருநாடு என்றால் உங்கள் நாக்கு தீட்டாகிவிடுமா?**

ஒருவர் இருக்கிறார், யார் என்று உங்களுக்கே தெரியும்! சட்டமன்றத்தில் திராவிட மாடல்-என்று எழுதி கொடுத்தால் பேச மாட்டார்! இந்தி மாத விழா நடத்த கூடாது-என்று சொன்னால், அந்த விழாவில் திராவிடத்தை விட்டுவிட்டு தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவாங்க! ஏன், “திராவிட நல் திருநாடு”-என்று சொன்னால் உங்கள் நாக்கு தீட்டாகிவிடுமா? இப்படி பாடினால் சிலருக்கு, வாயும் வயிறும் மூளையும் - நெஞ்சும் எரியும் என்றால் திரும்பத் திரும்ப பாடுவோம்! ‘திராவிடம்’ என்பது ஒருகாலத்தில் இடப்பெயராக - இனப்பெயராக - மொழிப்பெயராக இருந்தது. ஆனால், இன்றைக்கு, அது, அரசியல் பெயராக - ஆரிய ஆதிக்கத்திற்கு எதிரான புரட்சிப் பெயராக உருவெடுத்திருக்கிறது! ’திராவிடம்’ என்பது ஆரியத்திற்கு ’எதிர்ப்பதம்’ மட்டுமல்ல; ஆரியத்தை பதம் பார்க்கும் சொல்! அவர்களுக்கு தலைவர் கலைஞரின் முழக்கத்தை நான் நினைவுபடுத்துகிறேன், “கட்டை விரலோ, தலையோ காணிக்கையாக - இந்நாளில் எவனும் கேட்டால் பட்டை உரியும் - சுடுகாட்டில் அவன் கட்டை வேகும்!” இந்த முழக்கத்தை நிலைநாட்ட தான், திராவிட மாடல் இருக்கிறது!

திராவிட மாடல் ஆட்சி என்பது, மனு நீதியை மாற்றி, மக்களுக்கு சமநீதி - சமூகநீதி - சமவாய்ப்பை உறுதி செய்யும். இதைத்தான், இந்த புத்தகத்தின் 182-ஆவது பக்கத்தில் நம்முடைய பொன்முடி குறிப்பிடுகிறார். ”திராவிட இயக்கம் சாதியற்ற, சமத்துவ சமுதாயத்தைக் கனவு கண்டது. அதனால் திராவிட இயக்கத்தின் பெரும்பாலான இலக்குகள், அரசியல் அல்லது பொருளாதார நோக்கை விடவும் சமூகநோக்கில் இருந்தன”-என்று மிகச்சரியாக சொல்லியிருக்கிறார். அதனால்தான் நம்முடைய முழக்கம் என்பது, ‘எல்லார்க்கும் எல்லாம்’-என்று எளிமையாக சொல்கிறோம். அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதோடு, அனைத்து சமூகங்களின் வளர்ச்சி இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்கிறேன். இதை எளிமையாகவோ - சீக்கிரமாகவோ - நிறைவேற்றிட முடியாது.

**சமதர்ம உலகத்தை அமைக்க நாம் பயணித்து வருகிறோம்!**

ஈராயிரம் ஆண்டு அடிமைத்தனத்தை - ஒடுக்குமுறையை - பழமைவாத மனோபாவத்தை - 100 ஆண்டுகளில் மாற்றிவிட முடியாது! ஆனால், சுயமரியாதைச் சமதர்ம உலகத்தை அமைப்பதற்கான நம்முடைய பயணத்தில், நாம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு இன்றைக்கு முன்னோக்கிச் செல்ல திராவிட இயக்கம்தான் காரணம் என்பதை மட்டும், என்னால் உறுதியாக சொல்ல முடியும்!

எனவே, **இன்றைய தலைமுறையினருக்கு நான் சொல்ல விரும்புவது, நாம் கடந்து வந்த வரலாற்றை, அறிந்து கொள்ளுங்கள்! முனைவர் பொன்முடி அவர்களைப் போல், நம்முடைய இளைஞர்களும் திராவிட இயக்கம், இந்த மண்ணில் நிகழ்த்தி காட்டிய புரட்சி - அதனால் விளைந்திருக்கும் நன்மைகள் திராவிட இயக்கத்தின் தாக்கம் அதனால் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்பது பற்றியெல்லாம் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெறவேண்டும்! அவற்றை புத்தகங்களாக வெளியிடவேண்டும்! அப்படி செய்தால்தான், நம்முடைய இயக்கம் என்ன சாதித்திருக்கிறது என்பது, உலகம் முழுவதும் சென்றடைய முடியும்! அந்தக் கடமை உங்கள் கைகளில் இருக்கிறது. கொள்கைகள் தான் நம்முடைய வேர்! கொள்கைகளை வென்றெடுக்கத்தான், கட்சியும் ஆட்சியும்! கொள்கைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க கூடாது! அதற்கு, ”திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்” போன்ற இன்னும் பல வரலாற்று நூல்கள் உருவாக வேண்டும். ஏன் என்றால், இப்படிப்பட்ட புத்தகங்கள்தான் கட்சியையும் ஆட்சியையும் காக்கும் கேடயங்கள்! இதை உருவாக்கிக் கொடுத்த நம்முடைய முனைவர் பொன்முடி அவர்களை மீண்டும், மீண்டும் மனதார உளமார பாராட்டுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

---

### 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் செய்தது என்ன? ஆர்ப்பாட்டம் நடத்தும் பழனிசாமி கூறுவாரா?

# மயிலாடுதுறை மருத்துவமனையை தரம் உயர்த்தி கழக அரசு செய்து தந்த வசதிகள்!

## புள்ளி விபரங்களுடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலடி!

**சென்னை, அக்.27-**

**மயிலாடுதுறையில் ஆர்ப்பாட்டம் அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி 10 ஆண்டுகளில் செய்தது என்ன? முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு தலின்படி, கடந்த 3 ஆண்டுகளில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செய்த சாதனைகளின் பட்டியல் இதோ என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்துள்ளார்.**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (25.10.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்பல்கலைக்கழக வளாகத்தில், உலகளாவிய ஆயுர்வேத புதுமைகள் மற்றும் ஒருங்கிணைப்புகள் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு 150 ஆராய்ச்சி கட்டுரை தொகுப்பு நூலினை வெளியிட்டார்கள்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**உலகளாவிய ஆயுர்வேத புதுமைகள் மற்றும் ஒருங்கிணைப்புகள் சர்வதேச மாநாடு**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் சார்பில் 9வது தேசிய ஆயுர்வேதா தினத்தை முன்னிட்டு, உலகளாவிய ஆயுர்வேத புதுமைகள் மற்றும் ஒருங்கிணைப்பு என்னும் தலைப்பில் சர்வதேச மாநாடு இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கை மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் இருந்து 2 விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு பேச உள்ளார்கள். இம்மாநாட்டில் பங்கேற்பதற்கு ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, ஓமியோபதி போன்ற இந்திய மருத்துவத்துறைகள் தொடர்ந்து கடந்த மூன்றரை ஆண்டுகளாக தொடர்ந்து வளர்ச்சிகளை பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஆயுர்வேதா மருத்துவத்துவத்தைப் பொறுத்தவரை அதற்கென்று மருத்துவக்கல்லூரி நாகர்கோவில் பகுதியில் உள்ள கோட்டார் பகுதியில் அமைந்துள்ளது. அம்மருத்துவமனையில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்லாமல் முதுநிலை பட்டப்படிப்புகளுக்கும், இரசசாஸ்திரம், திரவியகுணம் என்கின்ற இரண்டு பாடப்பிரிவுகளின் கீழ் தலா 5 இடங்களை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரியின் வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு இந்திய மருத்துவத்திற்கு பல்வேறு வகைகளில் கூடுதல் வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. மலைவாழ் பகுதி மக்கள் பெரும்பாலும் வசிக்கும் 12 பகுதிகளில் நடமாடும் சித்த மருந்தகம் தொடங்கி வைக்கப்பட்டது. அதில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

**ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்!**

மேலும் 2023 பிப்ரவரியில் இளஞ்சி மன்றம் அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்டது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மூலிகைகள் பற்றிய முக்கியத்துவம் அறிந்து கொள்வதற்கு வசதியாக இளஞ்சி மன்றங்கள் தொடங்கப்பட்டது.

மூலிகை பயிர் சாகுபடியைப் பொறுத்தவரை இந்த மருத்துவத்திற்கு மூலிகை பயிர் அவசியம், எனவே அந்தவகையில் மூலிகை பயிர் சாகுபடிக்கு திண்டுக்கல்லில் 200 ஏக்கர் தேர்ந்தெடுத்து மூலிகை பயிர் சாகுபடி பயிர் தொடங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. டாம்ப்கால் மருந்து உற்பத்தியைப் பொறுத்தவரை அதில் பல்வேறு புதிய புதிய வகைகளில் மருந்து பொருட்கள் தொடர்ச்சியாக பயன்பாட்டில் வந்துக் கொண்டிருக்கிறது, ஆக அந்தவகையில் இந்த மாநாடு என்பது நவீன ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய ஆயுர்வேதத்தின் ஒருங்கிணைப்பு ஆகும். மேலும் இந்த மாநாட்டில் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பிக்கும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, ஏறத்தாழ 150 ஆராய்ச்சி கட்டுரைகள் ஒருங்கிணைக்கப்பட்டு புத்தகமாக இன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

**மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பான கேள்விக்கு**

இந்த ஆர்ப்பாட்டம் அறிவித்ததற்கு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனை என்பது அவர்களது ஆட்சிக் காலத்திலும் அங்கேயேதான் இருந்தது. இந்த மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் செய்திருக்கும் பணிகளை உங்களிடம் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் ஆர்ப்பாட்டத்திற்கு யாரையோ அனுப்புவதற்கு பதிலாக இம்மருத்துவமனைக்கு நேரிடையாக சென்று கடந்த 3 ஆண்டுகளில் என்னென்ன பணிகளை செய்திருக்கிறோம் என்பதை ஆய்வு செய்து தெரிந்துக் கொள்ளலாம்.

**ரூ. 7.18 கோடியில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன்!**

கடந்த 10 ஆண்டுகளாக இந்த மருத்துவமனையில் நீங்கள் என்னென்ன வளர்ச்சி பணிகளை செய்திருக்கிறீர்கள் என்பதை தெரிந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினால் நன்றாக இருக்கும். இந்த மருத்துவமனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த ஆண்டு ஜனவரி திங்கள் 10ஆம் தேதி, மாவட்ட அரசு தலைமையாக தரம் உயர்த்தப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள், அதுவரை அது வட்டார அரசு மருத்துவமனையாக தான் இருந்தது. கடந்த ஜனவரி திங்கள் 10ஆம் தேதி முதல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை வெளியிட்டது மட்டுமல்லாமல் 2023 ஜனவரி திங்கள் 27ஆம் தேதி நான் அம்மருத்துவமனைக்கு நேரிடையாக சென்று ரூ. 4.07 கோடி மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் மற்றும் பன்முக தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தினை திறந்து வைத்திருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, நான் மட்டுமே இம்மருத்துவமனைக்கு 4 முறை சென்றிருக்கிறேன். தமிழ்நாட்டில் 14000 மருத்துவமனைகள் இருக்கின்றது, அதில் இம்மருத்துவமனைக்கு மட்டும் 4 முறை சென்றிருக்கிறேன். மேலும் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் நாள் ரூ.7.18 கோடி மதிப்பீட்டில் MRI Scan கருவியினை தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு தொடங்கி வைக்கப்பட்டது.

**ரூ. 45.50 கோடியில் புதிய கட்டிடம்!**

2021 செப்டம்பர் திங்கள் 18 ஆம் நாள் அதே மருத்துவமனையில் சிடி ஸ்கேன் வசதி தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் இம்மருத்துவமனை ரூ.45.50 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. இப்படி இம்மருத்துவமனைக்கு கடந்த 3 ஆண்டுகளில் இத்தனை பணிகள் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எடப்பாடி ஆட்சிக்காலத்தில் என்னென்ன பணிகள் செய்திருக்கிறார்கள் என்பதை நாளை ஆர்ப்பாட்டம் நடத்தும் தோழர்களின் வாயிலாக பத்திரிக்கையாளர்களுக்கு தெரிவித்தால் நன்றாக இருக்கும். இன்னொன்று மருத்துவர்கள் பணியிடங்களை பற்றியும் சொல்லியிருக்கிறார்கள், இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை 28 மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், 88 செவிலியர்கள் அங்கே பணியில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள், நிரந்தர செவிலியர்கள் 49 பேர், தற்காலிக செவிலியர்கள் 39 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆக 88 செவிலியர்கள் அங்கே பணியில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். இதர பணியாளர்கள் 43 பேர் பணியில் இருக்கின்றார்கள். இதுமட்டுமல்லாமல் புற ஆதார முறையில் (outsourcing) 69 பணியாளர்கள் அங்கே பணிபுரிந்து வருகிறார்கள். எனவே இம்மருத்துவமனையில் மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கிறது.

**மருந்து கொள்முதலுக்கு ரூ. 33 இலட்சம் ஒதுக்கீடு!**

இம்மருத்துவமனையில் உள்ள மொத்த படுக்கைகள் 612, புறநோயாளிகளுக்கு இம்மருத்துவமனையில் போதுமான வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. சிறிய அறுவை சிகிச்சைகள் 1500 மாதந்தோறும் செய்யப்பட்டு வருகிறது. பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகள் மாதந்தோறும் 300 என்கின்ற அளவில் செய்யப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு தேவையான மருந்துகள் அனைத்தும் கையிருப்பில் உள்ளது. Essential Drugs என்கின்ற வகையில் 300க்கும் மேற்பட்ட மருந்துகள் இதையும் கடந்து ஏதேனும் அறுவை சிகிச்சைகளுக்கு மருந்துகள் தேவைப்பட்டால் அவர்களே கொள்முதல் செய்துக் கொள்ளும் வகையில் ரூ.33 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தனை வசதிகள் செய்திருக்கிறோம், இதனை எல்லாம் ஆய்வு செய்து ஆர்ப்பாட்டம் நடத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

**ஆயுர்வேத முதுநிலை பாடப்பிரிவுகள் தொடங்குவது தொடர்பான கேள்விக்கு**

இந்த அரசு 2 பாடப்பிரிவுகள் முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு தொடங்க முடிவெடுத்திருக்கிறது. அதாவது இரசசாஸ்திரம், திரவியகுணம் ஆகிய முதுநிலை பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பித்து இருக்கிறோம்.

மிகவிரைவில் ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி பெற்று பாடப்பிரிவுகள் தொடங்கப்படும். அடுத்த வாரம் மாண்புமிகு ஒன்றிய மருத்துவத்துறை அமைச்சர் மற்றும் ஆயுஷ் அமைச்சர் அவர்களை சந்திப்பதற்கு துறையின் செயலாளர் மூலமாக தேதி கேட்டிருக்கிறோம். மிக விரைவில் அவர்களை சந்திப்பதற்கு நேரம் வழங்கப்படும் என்று கருதுகிறேன். அவர்களை நேரில் சந்திக்கும்போது ஆயுர்வேதா முதுநிலை பட்டப்படிப்புகள் தொடங்க அனுமதி வழங்க கோரிக்கை விடுக்கப்படும்.

**MBBS/BDS காலியிடங்கள் தொடர்பான கேள்விக்கு**

தற்போது 4வது சுற்று கலந்தாய்வு நடைபெற்று வருகிறது. இதில் அரசுப் பொறுத்தவரை எம்.பி.பி.எஸ் காலியிடம் 1 தான், BDS பொறுத்தவரை 23 இடங்கள், 7.5% உள் ஒதுக்கீட்டில் தனியார் BDS இடங்கள் 4 காலியாக உள்ளது, MBBS சுயநிதி கல்லூரிகளில் 67 இடங்களும், தனியார் பல்கலைக் கழகங்களில் 61 இடங்களும், பல் மருத்துவக்கல்லூரிகளை பொறுத்தவரை ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அரசு கல்லூரிகள் 23 இடங்களும், சுயநிதி கல்லூரிகளில் 136 இடங்களும் ஆக மொத்தம் 292 காலியிடங்கள் உள்ளது.

இன்று 4வது சுற்று கலந்தாய்வு தொடங்கப்பட்டுள்ளது. கலந்தாய்வு வரும் 28.10.2024 முடிந்து 29.10.2024 அன்று பட்டியல் இறுதி செய்யப்பட்டு வரும் 05.11.2024க்குள் மாணவர் சேர்க்கை முடிவடையும். அனைத்து இடங்களும் நிரப்புவதற்கு ஏதுவாக கலந்தாய்வு நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்லைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, பதிவாளர் மரு.ஆறுமுகம், ஸ்ரீ சாய்ராம் ஆயுர்வேதா மருத்துவக்கல்லூரி இயக்குநர் மரு.வனிதா முரளிகுமார், மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.